
Stop Tract - Tamil

# நில்லுங்கள் !

**நின்று சிந்தியுங்கள்.**
**"உங்கள் நித்தியத்தை எங்கே செலவழிப்பீர்கள்"?**




## தேவனுடைய கிருபை வரமோ
## நித்திய ஜீவன்

## நீங்கள் அதை பெற்றுக் கொண்டிருக்கிறீர்களா?

இயேசு கிறிஸ்து சொன்னார் : "வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்," மத்தேயு 11.28.

கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள், அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள். துன்மார்க்கன் தன் வழியையும், அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும்விட்டு கர்த்தரிடத்தில் திரும்பக்கடவன்; அவர் அவன்மேல் மனதுருகுவார்; நம்முடைய தேவனிடத்திற்கே திரும்பக்கடவன்; அவர் மன்னிக்கிறதற்குத் தயை பெருத்திருக்கிறார், ஏசாயா 55:6,7.

நாம் நித்திய ஜீவனை பெற்றுக்கொள்ள முடியும் என்னும் நிச்சத்தை எப்படி பெற்றுக்கொள்ள முடியும்?

அதற்கு 4 காரியங்களை நாம் கண்டிப்பாக அறிந்திருக்கவேண்டும்:


1. வேறே தேவர்கள் இல்லை.
2. விக்கிர வணக்கம் கூடாது.
3. தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்கக்கூடாது.
4. ஓய்வு நாளை பரிசுத்தமாக ஆசரிக்க வேண்டும்.
5. பெற்றோரை கனப்படுத்த வேண்டும்.

## 1. நாம் அனைவரும் பாவிகள்


*"எல்லோரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களானார்கள்."* *ரோமர் 3 : 23*




சுயத்தை முதலிடத்தில் வைத்தல்




தேவனைவிட்டு பிரிவு




தேவனுடைய பூரண நிலைக்கு குறைவுபட்ட நிலை

6. கொலைசெய்யாதிருப்பாயாக.
7. விபச்சாரம்செய்யாதிருப்பாயாக
8. களவு செய்யாதிருப்பாயாக.
9. பொய்சாட்சி சொல்லாதிருப்பாயாக
10. இச்சியாதிருப்பாயாக.

நியாயப்பிரமாணத்தை (பரிசுத்த வேதாகமம்) மீறுவது பாவமாகும்.

தேவனுடைய பரிசுத்தத்தோடு ஒப்பிடும்போது நாம் அனைவரும் பாவிகள்.

கேள்வி 1 : பரிசுத்த வேதாகமத்தின் தேவன், உங்களுக்கும் தேனாயிருக்க விரும்புகிறீர்களா?
கேள்வி 2 : பாவத்திலிருந்து விலகி தேவனை நோக்கி வர விரும்புகிறீர்களா? (மனந்திரும்புதல்)

## 2. பாவத்தின் சம்பளம் மரணம்


*"பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்."* *ரோமர் 6 : 23*

*அப்பொழுது மரணமும் பாதாளமும் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டன இது இரண்டாம் மரணம். வெளி.20:14*

**விளக்கம்:** நாம் அனைவரும் பாவம் செய்திருக்கிறபடியால் தேவனுடைய நியாயப்பிரமாணம் சொல்லுகிறபடி நாம் அனைவரும் மரணம் அடைந்து பின்பு அக்கினிக் கடலில் சென்றடைவோம். இது ஒரு கெட்ட செய்தியாகும். விரும்புவார்களா? இல்லவே இல்லை.

அப்படியானால் இந்த அக்கினிக் கடலுக்குத் தப்ப ஏதாகிலும் வழி உள்ளதா?ஆம்! இயேசுக் கிறிஸ்துவின் வழியாக தேவன் நமக்கு நித்திய ஜீவனை இலவசமாக தர விரும்புகிறார். அதை நமது மதத்தின் மூலமாகவோ, நற்கிரியைகளின் மூலமாகவோ நாம் பெற்றுகொள்ள முடியாது.

எப்பொழுது நமது சரீரம் மரிக்கிறதோ



அதுவே மரணம் எனப்படுகிறது




கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு, எபேசியர் 2:8,9. ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல.





இலவசமாகக் கிடைப்பதே பரிசு என்றழைக்கப்படுகிறது. அதை நாம் நமக்குச் சொந்தமாக எடுத்துச் செல்லமுடியும். நித்திய ஜீவன் என்றால் தேவனை தனிப்பட்ட முறையில் அறிந்து மரணம் வரும்போது பரலோகத்திற்குச் செல்வதாகும்.

ஆகவே, தேவனுடைய நீதி சொல்கிறது நாம் அக்கினிக் கடலுக்குச் செல்ல வேண்டும். தேவனுடைய அன்பு நாம் பரலோகத்திற்குச் செல்ல விரும்புகிறது. தேவன் நமக்கு இலவசமாக மன்னிப்பையும் நித்திய ஜீவனையும் எப்படி அளித்துள்ளார் என்பதைக் கவனியுங்கள்.

## 3. இயேசு நமது எல்லா தண்டனையையும் ஏற்றுக்கொண்டார்

*நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினால் தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார். ரோமர் 5:8*




இயேசு கிறிஸ்து அனைத்து மக்களுக்கும் இரட்சகர். அவர் இப்பொழுது உங்களுக்கும் இரட்சகராக இருக்க ஆயத்தமாயிருக்கிறார்.

**கவனிக்க :** தேவன் நமது கடந்தகால, நிகழ்கால எதிர்கால பாவங்களை நம்மிலிருந்து எடுத்துவிட்டு அதை இயேசு கிறிஸ்துவின்மேல் வைத்துவிட்டார்.

*நாமெல்லாரும் அவனவன் தன்தன் வழியிலே போனோம் கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார். ஏசாா 53.6*

நித்திய நித்திய காலமாக நாம் அக்கினிக் கடலிலே தண்டனை பெற்றுவிடக்கூடாது என்பதற்காக நம்மெல்லாருடைய பாவங்களையும் தன்மேல் எடுத்துக்கொண்டார்.


*நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். ஏசாயா 53:5*

இப்பொழுது இயேசுகிறிஸ்து எல்லா மனிதருக்கும் இரட்சகர் (பாவ பரிகாரம்). எனவே, பரலோகத்தின் வாசல் இப்பொழுது எல்லாரும் பிரவேசிக்கும் வகையில் திறந்திருக்கிறது. ஆனால் நாம் எப்படி அதற்குள் செல்லமுடியும்?

**4. (a) எவரெல்லாம் இயேசுக் கிறிஸ்துவை**
- ☐ **தேவகுமாரன்**
- ☐ **நமக்குப் பதிலாக அவர் நமது பாவங்களுக்காக மரித்தார்**
- ☐ **மரணத்திலிருந்து தமது மாம்ச சரீரத்தோடு உயிர்தெழுந்தார் என விசுவாசித்து**


**(b) அவரை தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்கிறார்களோ**

அவர்களுக்கு இலவசமான பாவ மன்னிப்பும் நித்திய ஜீவனும் இப்பொழுதே கிடைக்கும். அதாவது, நீங்கள் இப்பொழுது இயேசு கிறிஸ்கு நமது பாவங்களுக்கு முழு விலையாக சிலுவையின்மேல் செய்த இரத்த தியாகத்தை ஏற்றுகொண்டு அவர் ஒருவரே நம்மை இரட்சிக்கமுடியும் மற்றபடி, மதங்களோ, நற்கிரியைகளோ இரட்சிப்பதில்லை என்பதை நம்புகிறீர்கள்.











பரிசுத்த வேதாகமத்தில் தேவன் இவ்வாக்குறுதிகளை கொடுத்துள்ளபடியால் நாம் இதன்மேல் மிகுந்த நிச்சயத்தோடு இருக்கமுடியும்.

**கேள்வி :** கீழ்காணும் நாம் எப்படியாக இருப்போம்? நாம் என்ன செய்யவேண்டும்?

*அவரை ஏற்றுகொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்.* யோவான் *1:12*

ஆதலால் கர்த்தருடைய நாமத்தை தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான். ரோமர் 10:13

குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன். உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டு என்று நீங்கள் அறியவேண்டும். *1* யோவான் *5:12,13*




**இயேசு சொன்னார் :**

*என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக் குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன்.* யோவான் *5:24*

இயேசுக் கிறிஸ்துவை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டு நித்திய ஜீவனை பெற கீழ்க்காணும் ஜெபத்தை செய்வது உங்களது விருப்பத்தைப் பொறுத்தது.

- சர்வ வல்லமையுள்ள தேவனே, நான் உமக்கு விரோதமாக என் சிந்தனையினால் வார்த்தையினால், செயலினால் தவறு செய்திருக்கிறேன்; நான் அதற்காக வருந்துகிறேன். எனது எல்லா பாவங்களும் மன்னிக்கப்பட விரும்புகிறேன்.
- இப்பொழுதே என் இருதய கதவைத் திறந்து கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை எனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்கிறேன். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்.

கையொப்பம் : ........................................................................ தேதி : ............................

இயேசு சொன்னார்: "*நான் அவைகளுக்கு நித்திய ஜீவனை கொடுக்கிறேன்; அவைகள் ஒருக்காலும் கெட்டுப் போவதில்லை*". யோவான் 10:28

**கேள்வி 1 :** உங்கள் பாவங்களிலிருந்து இயேசுக் கிறிஸ்து உங்களை இரட்சிக்க உண்மையாகவே நீங்கள் அவரை அழைத்தீர்களா?

ரோமர் 10:13-ன் படி நாம் இப்பொழுது இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். இனி நமக்கு மரணம் வருமென்றால் நாம் எங்கே போவோம்? நித்திய வாழ்வை நாம் இழக்க முடியுமா? யோவான் 10:28 கூறுகிறபடி நாம் அழிந்துபோவதில்லை.

"கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்" ரோமர் 10:9

**கேள்வி 2 :** நாம் எப்படி தேவனை இன்னும் நன்றாக அறிந்துகொள்ள முடியும்?

தினமும் வேதம் வாசிக்க வேண்டும் (1 பேதுரு 2:2); தேவனோடு பேச வேண்டும் (ஜெபம்); சத்தியத்தை பிரசங்கிக்கும் சபைக்கு செல்லவேண்டும் (எபிரேயர் 10:24,25); ஞானஸ்நானம் பெறவேண்டும் (அப்போஸ்தலர் நடபடிகள் 10:47,48); நீ இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டாய் என்பதை பிறருக்கு அறிவிக்க வேண்டும் (ரோமர் 10:9); மேலும் இயேசு கிறிஸ்துவுக்கு கீழ்படிந்து வாழ வேண்டும்.

இயேசு கிறிஸ்துவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுகொள்ள தீர்மானித்திருப்பீர்களானால் தயவுசெய்து எங்கள் முகவரிக்குக் கடிதம் எழுதுங்கள். நீங்கள் இன்னும் இயேசுகிறிஸ்துவை அறிந்துகொள்ள வேறு சுவிசேஷ பிரதிகளை நாங்கள் உங்களுக்கு அனுப்புவோம்.

**MOUNT OLIVE BAPTIST FOUNDATION**
P.O. Box-5, Tiruvattar - 629177, Kanyakumari District, Tamil Nadu, India
E-mail: newhope@vsnl.net